ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

*அதி விசேஷமானது*

අංක 2470/20 - 2026 ජනවාරි මස 06 වැනි අඟහරුවාදා - 2026.01.06

***2470/20 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1968 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

**2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழான கட்டளை**

2012 ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 1758/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டு சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் நியதிகளின்படி செயலாற்றுகின்றவருமான ஹாடிகலகே சம்பத் சஜீவ துய்யகொந்தா ஆகிய நான், மேலேயுள்ள ஒழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழும் மற்றும் காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறானதும் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதிய 2470/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பட்டியலுக்கான திருத்தத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆந் திகதிய 1854/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெயர்குறித்து நியமிக்கப்பட்டு பட்டியலிடப்பட்டதுமான எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் அல்லது ஏதேனும் குழு அல்லது உருவகத்துக்குச் சொந்தமான அல்லது அவற்றினால் சொந்தங்கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட எல்லா நிதியங்கள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றை இக் கட்டளை மூலம் முடக்குகின்றேன்.

2025 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய 2438/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள். அதன்கீழ் செய்யப்பட்ட எதற்றுக்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

ஏயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொன்தா (ஓய்வுபெற்ற)
டபிள்யூடபிள்யூவீ ஆர்டபிள்யூபீ (மூன்றுமுறை)
ஆர்எஸ்பீ (இரண்டுமுறை), யூஎஸ்பீ, எம்எம்எஸ்சீ
(மூலோபாய ஆய்வுகள் - சீனா), எம்எஸ்சீ (பாதுகாப்பு ஆய்வுகள்),
முகாமைத்துவம், எம்எஸ்சீ (பாதுகாப்பு மற்றும்
மூலோபாய ஆய்வுகள்), எப்என்டீயூ (சீனா), பீஎஸ்சீ.
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு,
தகுதிவாய்ந்த அதிகாரி.

2026 ஜனவரி மாதம் 06 திகதி.
கொழும்பு.

EOG 01-0046